பக்கங்கள் 17+6

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 16 புதன்கிழமை 02.10.2024 | அதிர்வு 62



## வினோவும் 'குட்பாய்'

(கே.வசந்தன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதிருக்கத் தீர்மானித்துள்ளதாக ரெலோவின் முன்னாள் வன்னி 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### தமிழ் மக்களுக்கு இனி இந்த நாட்டில்

# அனுதாபம் வேண்டாம்! நியாயமே வேண்டும்!!

### அநுரவிடம் மனோ கோரிக்கை

"ஜனாதிபதி அநுர சகோதரரே, தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையகத் தமிழருக்கும், ஈழத்தமிழருக்கும் இனிமேல் இந்த நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இன்று ஐக்கிய மக்கள் கூட்டணி மத்திய நிலையத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

ரஞ்சித் மத்தும பண்டார, டலஸ் அழகப்பெரும, சம்பிக்க ரணவக்க, தயாசிறி ஜயசேகர, கபீர் ஹசிம், நிசாம் காரியப்பர் ஆகியோர் கலந்துகொண்ட ஊடக சந்திப்பில் முன்னாள் எம்.பி. மனோ கணேசன் மேலும் கூறியதாவது:- 03



## திலித் கட்சி பக்கம் தாவிய ரொஷான்

### தவிசாளர் பதவியும் கிடைத்தது

முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க, திலித் ஜயவீர தலைமையிலான மவ்பிம ஜனதாக் கட்சியில் இணைந்துள்ளார்.

அக்கட்சியின் தவிசாளர் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அக்கட்சியின் உப தவிசாளர் பதவிக்காக 04

## வெள்ளியன்று இலங்கை வருகின்றார் ஜெய்சங்கர்

### முத்தரப்பு சந்திப்பில் ஈடுபடுவார்



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் நாளைமறுதினம் புதன்கிழமை இலங்கை வரவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் புதிய அரசு அமைந்துள்ள நிலையில், இந்நாட்டுக்கு வரும் முதலாவது வெளிநாட்டு 04



# மகாத்மா காந்தியின் ஜனன தின நிகழ்வு

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

மகாத்மா காந்தியின் 155 ஆவது ஜனன தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் மற்றும் காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இந்தியத் துணைத்தூதர் சாய் முரளி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் மோகனதாஸ், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அருள், கோப்பாய் ஆசிரியர் கல்லூரி அதிபர் லலீசன் மற்றும் சமய சமூகப் பிரதிநிதிகள், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது காந்தீயம் பத்திரிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன் முதல் பிரதியை வடக்கு மாகாண பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவனிடம் இந்தியத் தூதுவர் சாய் முரளி கையளித்தார். அதன் பிரதி அனைவருக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை, இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளால் சைக்கிள் பவனியொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் மர நடுகையும் இடம்பெற்றது.

















# அனுதாபம் வேண்டாம்! நியாயமே வேண்டும்!!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று பதவியேற்றுள்ள நண்பர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். அரசியல் குரோதங்கள், கட்சி வேறுபாடுகள் இன்றி பொறுப்புள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியாக, தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம் செயற்படுவோம். நீங்கள் உறுதியளித்த, உயிர்த்த ஞாயிறு படுகொலை சூத்திரதாரிகளைக் கண்டறிந்து தண்டனை வழங்குவது, ஊழல் ஒழிப்பு, வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நாட்டின் சொத்துகளை மீட்பது, மத்திய வங்கி பிணை முறி கொள்ளையரை தண்டிப்பது, சிவராம், நடேசன், எகனிலியகொட, லசந்த உட்பட ஊடகவியலாளர் கொலைதாரிகளைக் கண்டறிந்து தண்டனை வழங்குவது ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் இரு கரங்களை உயர்த்தி ஆதரவு வழங்குவோம்.

இந்நாட்டில் 200 வருடங்கள் வாழ்ந்து விட்ட மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு அங்குலம் நிலம்கூட இல்லை என அனுதாபப்பட்டு நீங்கள் தேர்தலுக்கு முன் பேசிய ஊடக காணொளியை கண்டேன். மலையக மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ளவும், வாழ்வாதார தேவைகளுக்காகவும் காணி வழங்குங்கள். காணி உரிமை வழங்கி அவர்களை இலங்கை தேசிய நீரோட்டத்துக்குள் கொண்டு வாருங்கள். உங்கள் “சிஸ்டம் சேஞ்” என்ற முறை மாற்றத்தைப் பெருந்தோட்டத் துறையில் ஆரம்பித்து, நமது மக்களை பெருந்தோட்ட தொழிலில் பங்காளி ஆக்குங்கள்.

வடக்கு, கிழக்கு ஈழத்தமிழ் சகோதரர்கள் பற்றியும் நீங்களும், உங்கள் கட்சியாளர்களும் அனுதாபப்பட்டு பேசி உள்ளதை கண்ணுற்றேன். ஆகவே, அரசியல் கைதிகளை விடுவியுங்கள். இப்போதுதான் யுத்தம் இல்லையே? ஆகவே, விடுக்கப்படாத அனைத்து தனியார் காணிகளையும் உடன் விடுவியுங்கள். காணாமல்போனார் பற்றி பேசி உள்ளீர்கள். அவர்களின் குடும்பத்தவருக்கு நியாயம் வழங்குங்கள். உடனடியாக அங்கே மாகாண சபைத் தேர்தல்களை நடத்துங்கள். மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும்படி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டு, கேட்டு நான் அலுத்தே போய் விட்டேன்.

ஆகவே, ஜனாதிபதி அநுர சகோதரரே, தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையகத் தமிழருக்கும், ஈழத்தமிழருக்கும் இனிமேல் இந்த நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும்

நேற்று முதல் நாள் நடைபெற்ற சர்வதேச குழந்தைகள் தினத்தன்று, வவுனியாவில் ஜனநாயக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த வலிந்து காணாமல் போன உறவு தாய்மார்களை, “தான் அநுரவின் ஆள்” என்று கூறி ஒரு காடையர் மிரட்டியுள்ளார். “இனிமேல் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை செய்ய விட மாட்டோம்” எனவும் கூறியுள்ளார். இதைக் கூறி நான் அரசியல் நோக்கில் உங்களை ஒருபோதும் குற்றம் சாட்டவில்லை. ஆனால், உங்கள் பெயரைப் பகிரங்கமாகப் பயன்படுத்தி, பெண்களை மிரட்டி, பயமுறுத்தியுள்ள இந்த நபரை உனடியாகக் கைது செய்யுங்கள்.

திருடர்களைப் பிடிக்க, கைது செய்ய, புதிய சட்டங்கள் கொண்டு வர, இருக்கும் சட்டங்களை திருத்த, வெளிநாட்டுக்குத் தப்பியோடியவர்களை மீண்டும் இந்த நாட்டுக்குக் கொண்டு வர, அவ்வவ் நாடுகளுடன் உடன்படிக்கைகள் செய்ய நாம் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம். நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லும் நிறைவேற்று ஜனாதிபதியா அல்லது முழுமையாக இதை ஒழிப்பதா என அது பற்றி அமர்ந்து பேசுவோம். அதற்கும் முழு அதரவு தருவோம்.

இன்று உங்கள் ஆலோசகர்கள் இருவரும், மத்திய வங்கி ஆளுநரும், நிதி அமைச்சு செயலாளரும் சர்வதேச நாணய நிதியுடன் பேசப் போகின்றார்கள். நல்ல விடயம். நாட்டின் நிதி நிலைமை உடைந்து நொறுங்கிய அன்று, நாம் தான் சர்வதேச நாணய நிதியிடம் செல்ல வேண்டும் என்று முதன் முதலில் நாடாளுமன்றத்தில் கூறினோம். அப்போது பிற்காலத்தில் ரணிலுடன் இருந்த மொட்டுக் கட்சியினர் எம்மை எதிர்த்து கூச்சல் எழுப்பினார்கள். அது உங்களுக்குத் தெரியும். இன்று சர்வதேச நாணய நிதியுடன் நீங்கள் பேசுகின்றீர்கள். வரவேற்கின்றோம். இது தொடர்பில் உங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவும் நாம் தயாராகவுள்ளோம்.

வாக்கு எண்ணிகையில் அதிகம் பெற்றதால் நண்பர் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகியுள்ளார். இரண்டாம் இடத்துக்கு சஜித் பிரேமதாஸ வந்துள்ளார். ஆனால், நண்பர் அநுரகுமார திஸாநாயக்க 50 விகிதம் வாக்குகள் பெறவில்லை. ஆகவேதான் மூன்றாம் இடத்தைப் பெற்றவர் முதல் அனைவரது வாக்குச் சீட்டுகளிலும் இருந்த இரண்டாம், மூன்றாம் வாக்குகள் எண்ணப்பட்டன.

ஆகவே, மூன்றாம் இடம் பெற்ற சிலிண்டருக்கு, இனி அரசியல் ரீதியாக இடம் இல்லை. எதிர்க்கட்சியான சிலிண்டருக்கு வாக்களித்தவர்கள், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு வாக்களிக்க வேண்டும். நாம் பொறுப்புள்ள நாடாளுமன்ற அரசாகச் செயற்படுவோம். நாடு இன்னமும் வாங்குரோத்து நிலையில்தான் இருக்கின்றது. மொத்தக் கடன் தொகை கூடியுள்ளது. மொத்த வட்டி தொகையும் கூடியுள்ளது. ஆகவே, நாம் அனைவரும் சேர்ந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். நாம் பொறுப்புடன் கூட்டாக நாட்டைக் கட்டியெழுப்புவோம்.”

– என்றார்.



# 17 வயது மாணவன் அடித்துப் படுகொலை

## மாத்தளையில் கொடூரம்

தாக்குதலுக்கு இலக்கான 17 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தளை - மடவலவுல்பத்த பகுதியில் நேற்று இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மடவளை - நாலந்தவத்தை பகுதியைச் சேர்ந்த மேற்படி மாணவன், நண்பர்கள் இருவருடன் மடவலவுல்பத்த பிரதேசத்துக்குச் சென்றிருந்தபோதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நண்பர் ஒருவரின் காதலியைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்தபோது, காதலியின் தந்தை மற்றும் சகோதரர் உள்ளிட்ட குழுவினர் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

காயமடைந்த மூன்று மாணவர்களும் நாலந்தவத்தை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 55 வயதுடைய காதலியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**திலித் கட்சி...**

முன்னாள் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக மிலான் ஜயதிலவும் மவ்பிம ஜனதாக் கட்சியில் இணைந்துகொண்டுள்ளார். அவருக்கு கம்பஹா மாவட்ட அமைப்பாளரார் பதவி வழங்கப்பட்டுள்ளது.

---

**வெள்ளியன்று இலங்கை...**

இராஜதந்திரி இவராவார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட புதிய அரச தரப்பினருடனும், தமிழ், முஸ்லிம் கட்சிகள் உள்ளிட்ட எதிர்க் கட்சிகளுடனும் மற்றும் சிவில் சமூகத் தினருடனும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது டில்லி வருமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை, ஜனாதிபதி அநுரகுமாரவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கையளிக்கவுள்ளார்.

---

**வினோவும்...**

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்"–துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தெற்கிலே மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியிலே அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவுதான் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகியமை.

அதைப்போலவே வடக்கு, கிழக்கில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களும் மாற்றம் ஒன்றினை எதிர்பார்த்து நிற்கின்றனர். அது புதியவர்களையும், இளையோரையும் நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்பதாகும்.

மக்கள் மனங்களில் ஏற்பட்டிருக்கும் இந்த மன மாற்றத்துக்கு நாம் தடையாக இருக்க முடியாது. அதற்கு வழிவிட வேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

மக்கள் மனங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, ஏற்றுக்கொண்டு இளைஞர்களுக்கும், புதியவர்களு–க்கும் இடம் கொடுப்பதே அரசியல் கட்சிகளினதும், தலைவர்களினதும் தலையாய கடமையாக இருக்கவேண்டும்.

என்னுடையதும் ஏனைய சில முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களதும் போட்டியிடாதிருக்கின்ற முடிவு ஏனையவர்களும் உணர்ந்து முடிவெடுக்க உந்துதலாக அமையும் எனக் கருதுகின்றேன்.

வன்னி மாவட்டத்தில் அரசியல் தெளிவுள்ள, ஆளுமைமிக்க இளம் தலைவர்களை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்ற மக்களின், இளைஞர்களின் விருப்பங்கள் நிறைவேற மக்கள் மனதறிந்து எதிர்வரும் நாடாளுமன்றத் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவெடுத்துள்ளேன்." - என்றுள்ளது.

# ஹெரோயினுடன் கைதான நபருக்கு ஏழு நாள்களுக்குத் தடுப்புக் காவல்

## சாய்ந்தமருதுவில் சம்பவம்

(பாறுக் ஷிஹான், தில்சாத் பர்வீஸ்)

சாய்ந்தமருதில் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்தவரை 7 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.



அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 43 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 15 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்திருந்தனர்.

தொடர்ந்து மறுநாள் திங்கட்கிழமை சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினரால் சந்தேக நபர், சான்றுப் பொருள்களுடன் ஒப்படைக்கப்பட்டார்.

இந்த வழக்குபு வழக்கு திங்கட்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ். எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் ஒக் ரோபர் மாதம் 07 ஆந் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்; விரைந்து நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை!

## ஜனாதிபதிக்கு அங்கஜன் இராமநாதன் கடிதம்

(த.சுபேசன்)

இந்திய மீனவர்களுடைய அத்துமீறலால் வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பிலும் இறுதி யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி கிடைப்பதில் நிலவுகின்ற தாமதம் தொடர்பிலும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பான கடிதம் ஒன்றை அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இந்திய மீனவர்களுடைய அத்துமீறல்களால் வடக்கு மாகாண மீனவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். வடக்கு மாகாண மீனவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க கடந்த காலங்களிலும் பல முயற்சிகளை எடுத்து வந்துள்ளோம். கடந்த காலங்களில் முன்னைய ஜனாதிபதிகளுடைய கவனத்துக்கும் இதனைக் கொண்டு சென்றிருந்தோம்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கூட கடந்த கால நாடாளுமன்ற உரையின் போது, இந்திய மீனவர்களுடைய அத்துமீறல்களால் உள்ளூர் மீனவர்கள் பாதிப்படைகின்றனர் என்றும் வடக்கு மாகாணத்தில் இந்திய மீனவர்களால் கடல் வளம் சூறையாடப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே, வடக்கு மாகாண மீனவர்களுடைய கடல் வளத்தைப் பாதுகாக்கவும் கடல் சார் இறையாண்மையை பாதுகாக்கவும் தங்களுடைய கட்சி கொள்கை ரீதியாக உடன்பட்டிருப்பதால் இவ் விவகாரம் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இறுதி யுத்தத்தில் மரணித்தவர்களுக்கு இன, மத, பேதங்களைக் கடந்து பொதுவான நினைவுத்தூபி அமைக்கவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உரிய சான்றிதழ் வழங்கவும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடும் உள்ளது.

உள்நாட்டு யுத்தத்தால் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு உயிரிழந்த மக்களுக்கு பொதுவான நினைவுத்தூபி அமைக்கும் பட்சத்தில் அது நாட்டில் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் வளர்க்கும்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இன வேறுபாடுகளைக் கடந்து யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் தூபி அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

எனவே நாட்டினுடைய ஒற்றுமை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் எதிர்கொள்ளும் சட்ட ரீதியாக சிக்கல்களை தவிர்க்கும் முகமாக பொதுவான நினைவுத் தூபி அமைக்கப்படுவதுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேவை: ஒரு காந்தி

இன்று காந்தி ஜெயந்தி.

மகாத்மா காந்தியின் பிறந்தநாளான ஒக்டோபர் 2ஆம் திகதி காந்தி ஜெயந்தியாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் இந்தியத் தேசத் தந்தையான காந்தியின் அகிம்சைப் பாதை மற்றும் உண்மையை நிலைநாட்டுவதில் அவர் காட்டி உறுதியை உலகிற்கு எடுத்துரைப்பது பொருத்தமானதாகும்.

இந்த ஆண்டு இந்தியா பாபு என்றழைக்கப்படும் காந்தியின் 155 ஆவது பிறந்தநாளை இந்தியா கொண்டாடுகிறது. இந்தியாவில் ஒக்டோபர் 2ஆம் திகதி அரசு விடுமுறை அளிக்கப்படுகிறது. அதே நேரம் உலகெங்கும் இந்த நாள் சர்வதேச அகிம்சை தினமாகவும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்திய தேசத்தின் சுதந்திர போராட்டத்தில் காந்தியின் பங்களிப்பு அளப்பரியது. கொடுங்கோல் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அகிம்சைப் பாதையைக் கடைபிடிக்க வைத்து, இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தவர். 1947 இல் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு அவர் எடுத்த தொடர் முயற்சிகளும் பல சுதந்திர போராட்ட வீரர்களை ஒருங்கிணைத்து வழிநடத்தியதும் முக்கிய காரணமாகும். உண்மையையும், அகிம்சையையும் எப்போதும் கடைபிடிக்க வேண்டும் என்ற அவருடைய தத்துவம் உலகில் பெரும்பாலானோருக்கு ஊக்கம் அளித்துள்ளது. இன்றும் அது உலகம் முழுவதற்கும் துலக்கமான ஒரு பாதையாக மிளிர்வது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

உலகின் தலைசிறந்த தலைவர்களின் முதன்மையானவராகத் திகழ்பவர் காந்தி. இந்தியாவில் மட்டுமில்லாமல் அவரின் பிறந்த தினத்தை உலகின் பல்வேறு நாடுகளும் முன்னெடுத்துக் கொண்டாடி வருகின்றன. அகிம்சை என்பது வெறும் வார்த்தையாக மட்டும் பார்க்கப்பட்ட காலத்தில் அதனை ஒரு விடுதலை போராட்டமாக மாற்றி வெற்றிக் கண்டவர் காந்தி. அவரின் செயல்கள் முதல் சிந்தனை வரை அனைத்தும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியவை. இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் தனக்கென ஒரு சகாப்தத்தையே உருவாக்கியவர்.


காந்தியின் உயரிய கொள்கைகளையும், அகிம்சை முறைப் போராட்டத்தையும் ஏற்றுக் கோடிக்கணக்கான இந்திய மக்கள் அவரை பின் தொடர்ந்தனர். தீண்டாமைக்கு எதிரான சொற்பொழிவுகளையும், சுதந்திரத்தின் முக்கியதுவத்தையும் மக்களுக்கு எடுத்துரைத்தார். அவரின் அறவழி போராட்டங்களினால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் இந்திய தேசிய காங்கிரஸுடன் தங்களை இணைத்துக் கொண்டு வன்முறையைக் கைவிட்டு, அமைதி வழியில் போராடத் தொடங்கினர்.

அதுவே இந்தியாவின் பூரண சுதந்திரத்துக்கு வழி செய்தது.

இன்று திக்குத் திசை தெரியாது தடுமாறி நிற்கும் ஈழத் தமிழினத்திற்கும் அதன் விடுதலை நோக்கிய பாதையில், காந்தி காட்டிய அகிம்சை நெறிமுறையே ஒரே மார்க்கமாக எஞ்சி நிற்கின்றது.

ஈழத் தமிழர்களின் தலைவர்கள் எல்லோரும் அந்த உண்மையை உணர்ந்து எடுத்துரைத்தாலும் - அது தான் நமக்கு முன்னால் உள்ள ஒரே தெரிவு, ஒரே மார்க்கம் என்பதை ஈழத் தமிழ் மக்களும் நன்கு உணர்ந்துள்ள போதிலும் - அந்தத் திசையில் தேச விடுதலைக்காக முன்னோக்கிப் போராடி நகர்வதற்கான வலிமை இன்றி ஈழத் தமிழினம் தடுமாறுகின்றது என்பதுதான் உண்மை.

காந்தி காட்டிய மார்க்கத்தில் - வழித்தடத்தில் - தமிழின விடுதலைக்காக ஈழத் தமிழ் மக்களை வழிநடத்திச் செல்வதற்கு உறுதியான, தெளிவான சிந்தனைப் போக்கு கொண்ட - திடசித்தமும் பற்றுறுதியும் மிக்க - தலைமை தமிழினத்தில் இல்லை. அதுவே ஈழத் தமிழினத்தின் இன்றைய பின்னடைவு நிலையாகும்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# சுகாதார அமைச்சின் மீளாய்வு கூட்டத்தில் பங்கேற்ற ஆளுநர்!

(அபு அலா )








கிழக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் மீளாய்வுக் கூட்டம் நேற்று (01) சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

அமைச்சின் பதில் செயலாளர் எந்திரி என். சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த மீளாய்வுக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பங்கேற்று சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக சேவைகள், கிராமிய மின்சார அமைச்சால் இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்.

அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அதுதொடர்பான விளக்கங்களை அமைச்சின் பதில் செயலாளர் எந்திரி என்.சிவலிங்கம் மற்றும் திணைக்கள தலைவர்கள் ஆகியோர் முன்வைத்தனர்.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஏ.எம்.எம்.றபிக், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) என்.தமிழ்ச்செல்வன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், சுகாதார அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் றியாஸ் உள்ளிட்ட உயரதிகாரிகள் மற்றும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# சேனைக்குடியிருப்பு வைத்தியசாலையில் தொற்றா நோய்க்கான கிளினிக் ஆரம்பம்

(றியாஸ் ஆதம்)

சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு வைத்திய சாலையில் தொற்றா நோய் கிளினிக் மற்றும் அதற்கான பரிசோதனைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய பிரிவுத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் இந்தக் கிளினிக் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தற்போது மிகவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

தொற்றா நோய் கிளினிக் மற்றும் அதற்கான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டதால் நற்பிட்டிமுனை மற்றும் சேனைக்குடியிருப்பு மக்கள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர். வெளிநோயாளர் பிரிவிலும் தினமும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

டாக்டர் எம்.பி.எம்.சில்மி வைத்திய சாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் கிளினிக் வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது அவ்வைத்தியசாலை பல்வேறு வழிகளிலும் முன்னேற்றமடைந்து வருகின்றது.



# கற்பிட்டி அல் அக்ஸாவில் சிறுவர் தினத்தில் மரம் நடுகை

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (01) மரம் நடுகை நிகழ்வு பாடசாலையின் அதிபர் யூ.எம். எம் அமீர் தலைமையில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வின் போது பாடசாலையின் அதிபர் யூ.எம். எம். அமீர், நிர்வாக பொறுப்பான பிரதி அதிபர் எம்.என். எம். நஸ்றீன் மற்றும் கல்வி விருத்திக்குப் பொறுப்பான பிரதி அதிபர் எஸ்.எப் சாஜினாஸ் ஆகியோரால் மரக்கன்றுகள் நடப்பட்டன. சிறுவர் தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் வகுப்பு ரீதியாக மாணவர்களுக்கான களப் பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.





# மாத்தளை சோமுவின் 'ஒற்றைத்தோடு' சிறுகதை நூல் சிட்னியில் வெளியானது

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

தமிழ் மக்கள் யுத்தத்தில் அடைந்த துன்பங்களையும் யுத்தத்துக்குப் பின்னர் வாழ்வியலுக்காக படும் துன்பக் காட்சிகளையும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் மனப்போராட்டங்களையும் சித்தரிக்கும் மாத்தளை சோமுவின் சிறுகதை தொகுதியான 'ஒற்றைத்தோடு' கடந்த வாரம் சிட்னியில் வெளியானது.

புலம்பெயர் மண்ணில் முன்னணி ஈழத்து எழுத்தாளரான மாத்தளை சோமுவின் 30 ஆவது நூலாக 'ஒற்றைத்தோடு' வெளியிடப்பட்டுள்ளது.

சிறுகதைகள் அனைத்தும், இலங்கையில் நடைபெற்ற இறுதியான யுத்தக் களத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் குடியேறியவர்கள் தொடர்பானவற்றை கருப்பொருளாகக் கொண்டுள்ளன. படிக்கும் போதே கண்களை கசிய வைக்கின்றன. பல்வேறு இதழ்களில் வெளியாகிய பாராட்டுப் பெற்ற 23 சிறுகதைகள் இந்த தொகுப்பில் வெளியாகியுள்ளன.

போருக்குப் பிந்தைய ஈழத் தமிழர்களின் வாழ்க்கை, அவர்களுக்கு ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு, தமிழ்ப் பெண்கள் மீதான இலங்கை ராணுவத்தினரின் அத்துமீறல்கள் போன்றவற்றை இந்தக் கதைகள் அப்பட்டமாகக் காட்டுகின்றன.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வு சிட்னியில் உள்ள துங்காபி புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்தில் இலக்கிய ஆர்வலர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் தொடக்க இணைப்புரையை குலசேகரம் சஞ்சயனும் வரவேற்புரையை சமூக ஆர்வலர் வசந்தராஜாவும் ஆற்றினர்.

இந்நிகழ்வின் தலைமை உரையை கலாநிதி குலம் சண்முகமும் வாழ்த்துரைகளை பத்திரிகையாளர் எஸ். சுந்தரதாஸ் மற்றும் கலாநிதி மாலினி ஆனந்தகிருஷ்ணன் ஆகியோரும் ஆற்றினர்.



இலக்கியப் படைப்புகள் அனைத்திலும் தனக்கென தனி முத்திரை பதித்துள்ள மாத்தளை சோமு பற்றிய படைப்பாளி குறித்துப் பகிர்வை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.

ஒற்றைத்தோடு சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக உரையைச் செல்வி வி.விஜயாழ், திருமதி இந்துமதி சிறினிவாசன், மயில்வாகனம் தனபாலசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். முனைவர் இலக்குவன் சொக்கலிங்கமும் உரையாற்றினர்.



# மட்டு.கல்லடியில் நடைபெற்றுள்ள பழைய மாணவர் விளையாட்டு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் பழைய மாணவர் அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை ஞாயிற்றுக்கிழமை கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலய மைதானத்தில் நடத்தியது.



பழைய மாணவர் சங்கத் தலைவரும், பழைய மாணவர் சங்கத் பிரித்தானிய கிளைப் போசகருமான வைத்தியர் பாலசுப்பிரமணியம், மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வீ. வாசுதேவன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில், மட்டக்களப்பு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.ஹரிகரராஜ், கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். அனந்தரூபன், முன்னாள் கல்விப் பணிப்பாளர் க.பாஸ்கரன், சிவானந்தா விளையாட்டுக் கழகத் தலைவர் எஸ். ஜெகன், மட்டக்களப்பு மாவட்டக் கிரிக்கெட் சங்கத் தலைவர் வி.பிரதீபன், சகுந்தலா பாலசுப்பிரமணியம், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது பழைய மாணவர் சங்க அணிகளுக்கிடையே கிரிக்கெட், கரப்பந்து மற்றும் கயிறிழுத்தல் போட்டிகள் நடைபெற்றன.



# பொத்துவில் களுகொல்லயில் குழாய் நீர் வசதி அன்பளிப்பு

**(வி.ரி. சகாதேவராஜா)**

பொத்துவில் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய களுகொல்ல கிராமத்தில் நிலவும் குடி தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக குழாய் நீர் விநியோகத் திட்டம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சுவிஸில் வாழும் பாண்டிருப்பைச் சேர்ந்த பரோபகாரி திருமதி ஜீவா விஜி என்பவர் இதனை அமைத்து வழங்கியுள்ளார்.

சிவஜோதி அமைப்பின் தலைவர் மதி மற்றும் செயலாளர் நந்தினி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் இக் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. ஜீவாவின் நெருங்கிய தோழியான சுவிஸைச் சேர்ந்த அலா நுஸ்ரத்டினோரே என்பவர் இதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் சமுக செயற்பாட்டாளர்களான கி. ஜெயசிறில், வா. குணாளன், எஸ். அருளம்பலம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

களுகொல்ல ஊர்ப் பொதுமக்கள் பல கருத்துக்களை முன் வைத்தார்கள்.

பொதுவான கட்டடங்கள், மண்டபங்களின் இல்லாத குறையையும் நிவர்த்தி செய்து தர வேண்டும் என்றும் கூறினார்கள்.

# ஊடக மாணவர்களுக்கான கருத்தரங்கு திருமலையில்



**( ஹஸ்பர் ஏ.எச் )**

வாசல் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் க.பொ.த. உயர்தரத்தில் ஊடகக் கற்கையை பயிலும் மாணவர்களுக்கான செய்தி எழுதுதல் மற்றும் பக்க வடிவமைப்பு தொடர்பான முழுநாள் செயலமர்வு திருகோணமலை பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வுக்கு வளவாளர்களாக ஊடகவியலாளர் அ.அச்சுதன், ஊடக ஆசிரியர் ச.திருச்செந்தூரன், பக்க வடிவமைப்பாளர் மு.ஷ.மு.மஸாகிர் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான விரிவுரைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிகழ்வுக்குச் சிரேஷ்ட ஊடகவியலாளர்களான திருமலை நவம், பொன்.சற்சிவானந்தம் ஆகியோர் கலந்துகொண்டு அனுபவ உரைகளை வழங்கினர்.






# ஓய்வு நிலையில் பாராட்டு!

(அஸ்லம் எஸ். மௌலானா)

கல்முனை பொது நூலகத்தில் நூலக உதவியாளராகக் கடமையாற்றிய திருமதி சுகிர்தன் தங்கேஸ்வரி அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு பிரியாவிடை நிகழ்வு நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

நூலகர் ஏ.எல்.எம். முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், ஆயுள்வேத வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி நந்தினி பவன் , பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வர வர்மன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது அரச சேவையில் 30 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள நூலக உதவியாளர் திருமதி சுகிர்தன் தங்கேஸ்வரியின் உன்னத சேவைகள் குறித்து அதிதிகளின் உரைகளில் எடுத்துரைக்கப்பட்டது. நூலக சமூகத்தினரின் சார்பில் பொன்னாடை போர்த்தி அவர் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் மருதமுனை நூலகர் ஹரீஷா சமீம், நற்பிட்டிமுனை நூலகர் எம். அமீனுல்லாஹ், அட்டாளைச்சேனை நூலகர் ஏ.சி. அன்வர் சதாத், அக்கரைப்பற்று நூலகர் ஐ.எல். எம். ஹனிபா உட்பட நூலக உதவியாளர்கள் மற்றும் நூலகப் பணியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.





# கற்பிட்டியில் கண்காட்சி

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி ஸ்ட்ராட் ஃபோர்ட் இன்ரநஷனல் கல்லூரியின் முதலாவது மாபெரும் கண்காட்சி திங்கட்கிழமை (30) பாடசாலையில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் ரம்சானி பேகம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியில் அதிதிகளாக கற்பிட்டி அல் அக்ஷா தேசிய பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் எம். எம். எம். ரோஸ் புகாரி , ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.டி.எம். பைறுஸமான், வை. எம்.எம். ஏ. கற்பிட்டி கிளையின் ஆலோசகர் எச். எம். சுஹைப் , தலைவர் ஏ.எச்.எம்.எம். ஷாபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் இணை பாடவிதான செயற்பாடுகளின் அங்கமாக உள்ள திறமைகள் மற்றும் புதிய படைப்புகளை வெளிப்படுத்தும் நோக்கோடு தொடர்புபட்ட மேற்படி கண்காட்சி நிகழ்வு, கல்வி மற்றும் கலாச்சார விழுமியங்களை கொண்டதாக அமைந்திருந்தமை விசேட அம்சமாகும். நிகழ்வை நடத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றிகளை கல்லூரியின் அதிபர் ரம் சானி பேகம் தெரிவித்துள்ளார்.





# ஊழியர் ஒழுக்காற்று சட்டதிட்டங்கள் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு

(றியாஸ் ஆதம்)

தேசிய கூட்டுறவு சபையின் அனுசரணையில் கல்முனை மாவட்ட கூட்டுறவு சபை ஏற்பாடு செய்த கல்முனை மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான ஊழியர் ஒழுக்காற்று சட்ட திட்டங்கள் தொடர்பான ஒரு நாள் பயிற்சி செயலமர்வு கல்முனை மாவட்ட கூட்டுறவு சபை அலுவலகத்தில் இடம் பெற்றது.

இடந்தப் பயிற்சிச் செயலமர்வில் ஊழியர் ஒழுக்காற்று சட்ட திட்டங்கள், கணக்காய்வு நியமங்கள், பொதுச்சட்டம், கூட்டுறவுச் சட்டம், நடுத்தீர்ப்பு விசாரணை, கூட்டுறவு விதிமுறைகள் தொடர்பில் வளவாளர்களால் விளக்கமளிக்கப்பட்டது.



கல்முனை மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவர் இசட். ஏ.லத்தீப் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.வேல்வேந்தன், தலைமைக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம். பரீட், எம்.சி.ஜலால்தீன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான பி.ரி.ஆதம்பாவா, ஏ.சி.எம்.அஷ்ரப், எஸ்.ஜாபீர், எம்.எப்.எம்.எப்.முதஸ்ஸிர், பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்டனர்.





# காரைதீவு கண்ணகி இந்துவுக்கு பாண்ட் வாத்தியக் கருவி அன்பளிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு காரைதீவு கண்ணகி இந்து வித்தியாலயத்தில் நேற்று (01) செவ்வாய்க்கிழமை சிறுவர் தினக்கொண்டாட்டமும் பாண்ட் வாத்திய கருவிகள் அன்பளிப்பு நிகழ்வும் அதிபர் சீ. திருக்குமார் தலைமையில் நடைபெற்றன.

ஆஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம் ஒஸ்கார் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையிலான வீரக்குட்டி குடும்பத்தினர் பாண்ட் வாத்திய கருவிகளை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

முன்னதாக முதல் தடவையாக பான்ட் வாத்தியம் இசைக்கப்பட்டது.

பிரதம அதிதியாக காரைதீவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆ.சஞ்சீவன் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா, ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் இ.தவராசா, ஆசிரியர்களான இ.ரத்ன குமார், கே.லோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலை இணைப்பாளர் திருமதி சோதீஸ்வரி கமலநாதன், ஆசிரிய ஆலோசகர் ரி.சிவநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாண்ட் வாத்திய கருவிகள் அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டன.





# கல்லடியில் அணிசேர் கௌரவிப்பு!

(பழுவூரான்)

1982 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை இசை நடனக் கல்லூரியில் பயின்ற மாணவிகளின் ஒழுங்கு படுத்தலில் "ஆசான்களுக்கான அணிசேர் கௌரவமளித்தல்" நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராம கிருஷ்ணமிசன் விபுலானந்தர் மணி மண்டபத்தில் சனிக்கிழமை (28) இடம்பெற்றது.

பட்டிருப்பு கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி டேசிராணி இராசகுமாரன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில், முதன்மை அதிதியாகக் கிழக்கு பல்கலைக்கழக



இந்து நாகரீகத்துறை பேராசிரியர் கலாநிதி சாந்தி கேசவனும், சிறப்பு அதிதிகளாக மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் மற்றும் மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# தமிழர்களது நிலையைக் கருத்தில் கொண்டு தமிழ் கட்சிகள் ஓரணியில் இறங்க வேண்டும்!

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இராஜேஸ்வரன் கோரிக்கை

(வி.ரி.சகாதேவராஜா)

நடை பெறவுள்ள பொதுத் தேர்தலில் தமிழ் கட்சிகள் ஓரணியில் போட்டியிட்டால் மட்டுமே அம்பாறை மாவட்டத்தில் தமிழ் ஆசனத்தை காப்பாற்ற முடியும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் முன்னாள் மு. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாட்ட தமிழ் மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். பல கோணங்களில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் வளங்கள் சுரண்



ப்படுவதுடன், உரிமைகளும் திட்டமிட்டு பறிக்கப்படுகின்றன.

உதாரணமாக கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் யாவரும் அறிந்த விடயம்.

இவ்வாறான நிலையில் கட்சி, சின்னம் என்று இழுபறி படாமல் விட்டுக் கொடுப்புடன் தமிழ் கட்சிகள் ஒரு இணக்கத்துக்கு வர வேண்டும்.

இல்லையேல் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சுமார் ஒரு லட்சம் தமிழ் வாக்குகளும் ஏழு, எட்டாக பிரிந்து எம் மக்களின் வாக்குகள் பயனற்று போகும். எமது ஆசனம் எமக்கு தீங்கு செய்யும் தரப்புக்கே சென்று விடும். ஆகவே நிலைமையைக் கருத்தில் கொண்டு இருக்கும் குறுகிய நாள்களுக்குள் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர் பார்க்கும் நல்ல முடிவை தமிழ் கட்சிகள் எடுக்கும் என நம்புகிறேன்.- என்றார்.



இலங்கைச் சிறையிலுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி

# வேலைநிறுத்தம்!

## இராமேஸ்வரத்தில் இன்று முன்னெடுப்பு

## தங்கச்சி மடத்தில் நாளை போராட்டம்

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால் இராமேஸ்வரத்தில் கடலுக்குச் செல்லாமல் மீன்பிடி இறங்குதளத்தில் 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன. 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கும் செல்லவில்லை.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற செல்வம், உதிர்தராஜ் ஆகியோருக்குச் சொந்தமான இரண்டு விசைப்படகுகளை கடந்த செப்டெம்பர் 29ஆம் திகதியன்று எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றினர். அந்தப் படகுகளில் இருந்த 17 மீனவர்களும் கைது செய்யப்பட்டு வவுனியா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நீதிமன்றக் காவல் ஒக்டோபர் 10ஆம் திகதி வரை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழக மீனவர்களை சிறைப்பிடித்ததைக் கண்டித்தும், இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களையும் கைபற்றப்பட்ட படகுகளையும் மீட்டு வர நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால் இராமேஸ்வரத்தில் கடலுக்குச் செல்லாமல் மீன்பிடி இறங்குதளத்தில் 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன. 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கும் செல்லவில்லை.

இதனைத் தொடர்ந்து கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை தங்கச்சிமடம் மீனவர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

# பரிதாபம்!

## நிவாரணம் வழங்கப் போன ஹெலி வெள்ளத்துக்குள் சிக்கித் தவிப்பு



பீகாரின் சீதாமர்ஹி என்ற பகுதியில் இராணுவத்தின் இலகு ரக ஹெலிகொப்டர் ஒன்று வெள்ளத்தில் சிக்கி விபத்துக்குள்ளானது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணப் பொருள்களை எடுத்துச்சென்றபோது இந்த ஹெலிகொப்டர் வெள்ளத்தில் இறங்கியுள்ளது.

ஹெலிகொப்டரின் இருந்த 2 பைலட்கள் உள்ளிட்ட 3 பேரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

ஹெலிகொப்டரில் இருந்த நிவாரணப் பொருட்களை படகில் வந்து மக்கள் எடுத்துச் சென்றனர்.

மேலும், மீட்புப் பணியாளர்கள் வராதமையால் பொது மக்கள் உதவியுடன் ஹெலிகொப்டரை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.



# தமிழக வெற்றிக் கழக மாநாடு

# பூஜை!

## நாளை மறுதினம்

தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாடு பூஜை நாளைமறுதினம் நடைபெற வுள்ளது.

விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் மாநாடு எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது. விழுப்புரம் மாவட்டம் விக் கிரவாண்டி விசாலை கிராமத்தில் மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில்தான் கட்சிக் கொடியின் அர்த்தத்தை விஜய் அறி விப்பார் என்று எதிர்பார்க்கப்படுகி றது. மேலும், கட்சியின் கொள்கை ளும் இந்த மாநாட்டில் தான் அறிவிக் கப்படவுள்ளது. இதனால் விஜய் கட்சி யின் தொண்டர்கள் இந்த மாநாட்டை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள்.

இந்நிலையில் நாளைமறுதினம் காலை 8 மணிக்கு தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாட்டுக்கான பூஜை நடைபெறும் என கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரி வித்துள்ளார்.

பூமி பூஜைக்குப் பின்னர் மாநாட்டுத் திடலில் பந்தல் அமைப்பது உள்ளிட்ட பணிகள் தொடங்கும் என அவர் தெரி வித்துள்ளார்.

# போர்ப்பதற்றம்: இந்தியர்களுக்கு எச்சரிக்கை!

பாலஸ்தீனம் மற்றும் லெபனா னில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு மத்தியில் ஈரான் இரா ணுவம் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால், நேற்று இஸ்ரேல் வாழ் இந்தியர்களுக்குத் தூதரகம் எச்ச ரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், ஈரான் மீது எந்நேர மும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் நிலவுவதால் இந்தியர் களுக்கு இந்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"இந்திய மக்கள் ஈரானுக்குப் பயணம் செல்வதைத் தவிர்க்க வேண் டும். ஈரானில் நிலவும் பாதுகாப்பு நிலைமை குறித்துத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்" என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும், ஈரான் வாழ் இந்தியர்களை பாதுகாப்பாக இருக்கும்படியும், தூத ரகத்துடன் தொடர்பில் இருக்கும்படி யும் அரசு வலியுறுத்தியுள்ளது.

# மகாளய அமாசாசை: நீர்நிலைகளில் குவிந்த மக்கள்



மகாளய அமாவாசை தினமான இன்று மறைந்த முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபாடு நடத்த பொதுமக்கள் குவிந்தனர்.

புரட்டாதி மாதத்தில் வரும் அமா வாசைமகாளயஅமாவாசைஎனஅழைக் கப்படுகிறது.மறைந்தமுன்னோர்களுக்கு திதி கொடுப்பதற்கு மிகவும் உகந்த நாளாகக் கருதப்படுகிறது. ஆடி, தை அமாவாசைகளில் திதி கொடுக்காத வர்கள் புரட்டாதி மாதத்தில் மகாளய அமாவாசை தினத்தில் தர்ப்பணம் கொடுப்பார்கள்.

இன்று மகாளய அமாவாசையை முன்னிட்டு, முன்னோர்களுக்கு தர்ப் பணம் கொடுப்பதற்காக பொதுமக் கள் நீர்நிலைகளில் குவிந்தனர். சென் னையில், திருவொற்றியூர் கடற்கரைப் பகுதி, மயிலாப்பூர் கபாலீஸ்வர் கோவில் தெப்பக்குளம் உள்ளிட்ட கோவில் தெப்பக்குளங்கள், நீர் நிலைகளில் இன்று அதிகாலை முதலே பொது மக்கள் புனித நீராடி மறைந்த தங்கள் முன்னோர்களுக்கு, எள்ளுப்பிண்டம் வைத்து தர்ப்பணம் கொடுத்தனர்.

அதேபோல், காரைக்குடி, கோவிலூர் கொற்றாளீஸ்வரர் கோவில் குளக்கரை யில் பக்தர்கள் ஏராளமானோர் குவிந்து முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபாடு செய்தனர். மேலும், கடலூர் வெள்ளி கடற்கரை, இராமேஸ்வரம் அக்னி தீர்த்தக் கடலில் ஆயிரக்கணக் கான பக்தர்கள் புனித நீராடி முன் னோர்களுக்கு தர்ப்பணம் செலுத்தி னர்.



# மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம்

## ஈரானுக்கு பதிலடி கொடுக்க இஸ்ரேல் மும்முரம்

## எண்ணெய் உற்பத்தி மையங்கள் குறிவைக்கப்படலாம்

## கச்சாய் எண்ணெ விலை உயரும் அபாயம்

## பதில் தாக்குதல் நடத்தினால் அடி தொடரும் என்கிறது ஈரான்

இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்திய நிலையில், மத்திய கிழக்கில் பெரும் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவ், ஜெருசலேம் உள்பட இஸ்ரேலின் அனைத்துப் பகுதிகளையும் குறிவைத்து ஈரானால் நேற்று ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், ஈரானின் ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடியாக, ஈரானில் உள்ள எண்ணெய் உற்பத்தி நிலையங்களைக் குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தலாம் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தத் தாக்குதல் ஓரிரு தினங்களில் தொடங்கலாம் என்று ‘ஆக்சியஸ்’ செய்தி வெளியிட்டுள்ளது.

இதனால், கச்சாய் எண்ணெய் விலை அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

இஸ்ரேல் மீதான ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து, இந்தச் சண்டையில் அமெரிக்காவை தலையிடவேண்டாம் என்று ஈரான் கூறியிருக்கிறது.

இதுகுறித்து அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்ச்சியின் தகவலை மேற்கோள் காட்டி ஈரானிய செய்தி நிறுவனமான தஸ்னிம் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலின் முக்கிய நட்பு நாடான அமெரிக்கா, நேற்று இஸ்ரேல் நோக்கிச் சென்ற பல ஏவுகணைகளை தடுக்கும் கூட்டு தற்காப்பு முயற்சியில் பங்கு வகித்துள்ளது.

மேலும், இஸ்ரேலுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளது. அதன்படி அந்நாட்டுக்கு ஆயுதங்களையும் வழங்கியுள்ளது.

நேற்று நடத்திய தாக்குதலின் போது இஸ்ரேலிய குடிமக்களை குறிவைப்பதை ஈரான் தவிர்த்தது என ஈரான் இராணுவ அதிகாரி முகமது பாகேரி தெரிவித்தார்.

அதேவேளை, ஈரான் மீது இஸ்ரேல் தொடர்ந்து பகைமை கொண்டிருந்தால் பொதுமக்களைக் குறிவைப்பதற்குச் சாத்தியம் உள்ளது என்றும் கூறினார்.

இஸ்ரேலின் இரு இராணுவத் தளங்களை இலக்காகக் கொண்டே ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

மொசாட் மற்றும் இஸ்ரேலின் உளவு பிரிவு தலைமையகங்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை ஈரானின் இராணுவ அதிகாரி முகமது பாகேரி தெரிவித்து உள்ளார்.

இதற்கிடையில், ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.

இந்நிலையிலேயே ஈரானின் இராணுவ அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் மீண்டும் தாக்கப்பட்டால், இஸ்ரேல் முழுவதும் உள்ள உள்கட்டமைப்பைத் தாக்குவோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

இன்னும் தீவிரமாக மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்துவதுடன், இஸ்ரேல் அரசாங்கத்தின் அனைத்து உள்கட்டமைப்புகளும் குறிவைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேல் மீதான ஈரானின் ஏவுகணைத் தாக்குதில் இருவருக்கு லேசான காயம் ஏற்பட்டது எனவும், 181 ஏவுகணைகள் ஏவப்பட்ட நிலையில் அவற்றில் பெரும்பாலானவை நடுவானில் இஸ்ரேலின் ஏவுகணைத் தடுப்பு அமைப்பால் சுட்டு வீழ்த்தப்பட்டன எனவும், ஏவுகணைத் தாக்குதலில் பாசாலைக் கட்டடம் சேதமடைந்துள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதை ஈரான் மக்கள் கொண்டாடினர். தலைநகர் தெஹ்ரானில் உள்ள இங்கிலாந்துத் தூதரகம் முன் திரண்ட ஈரானியர்கள் ஈரான், ஹிஸ்புல்லா கொடிகளை ஏந்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

பக்கங்கள் 06
கனடா முரசு
புதன்கிழமை 02/10/2024

## மிஸிஸாகாவில் ஒருவர் கொலை

ஒன்றாரியோ, ஒக்டோபர் 02 கனடாவின் மிஸிஸாகா பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டமையுடன் மேலும் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

02



# லெபனானில் இருந்து விமானங்கள் மூலம் கனடியர்களை அழைத்து வர நடவடிக்கை

**லெபனானில் சிக்கியுள்ள கனடியர்களை அழைத்து வருவதற்கு சுமார் 800 ஆசனங்கள் விமான ஆசன ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**கூடுதல் எண்ணிக்கையிலான ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என லெபனானில் வாழ்ந்து வரும் கனடியர்களின் உறவினர்கள் கோரியுள்ளனர்.**

ஏற்கனவே அரசாங்கம் தமது நாட்டுப் பிரஜைகளுக்கு அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில் தற்பொழுது இஸ்ரேலிய படையினர் தொடர் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ள நிலையில் அங்குள்ள கனடிய பிரஜைகளை மீட்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

கூடுதல் எண்ணிக்கையில் விமானங்களை பயன்படுத்தி கனடிய பிரஜைகளை அங்கிருந்து மீட்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லெபனானில் உயிரிழந்த நபர் ஒருவரின் பெற்றோரும், கனடியர்களை மீள அழைத்து வருமாறு கோரியுள்ளனர்.

சுமார் 45 ஆயிரம் கனடியர்கள் லெபனானில் வசிக்க கூடும் என வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

வேறும் நாடுகளிலிருந்து பயணம் செய்யும் விமானங்களின் வர்த்தக விமானங்களில் ஆசனங்களை பதிவு செய்து அதன் ஊடாக கனைடியர்களை மீள அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதுவரையில் எதிர்வரும் மூன்று நாள்களுக்கு சுமார் 800 ஆசனங்கள் இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன எனவும் இதன் மூலம் கனடியர்களை அழைத்து வர முடியும் எனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கனடியர்கள் முடிந்த அளவு சீக்கிரம் லெபனானை விட்டு வெளியேற வேண்டும் என கனடா அறிவித்துள்ளது.





# இஸ்ரேலின் மீது ஏவுகணைகளை வீசும் ஈரானின் நடவடிக்கைக்குக் கண்டனம்!

## நாடாளுமன்றத்தில் கனடிய வெளியுறவு அமைச்சர் மெலானி ஜோலி தெரிவிப்பு

ஒன்றாரியோ, ஒக்டோபர் 02

செவ்வாயன்று மத்திய கிழக்கில் போர் பரவிய நிலையில், வெளியுறவு அமைச்சர் மெலானி ஜோலி, இஸ்ரேல் மீது பல்வேறு ஏவுகணைகளை வீசும் ஈரானின் நடவடிக்கையை 'ஐயத்திற்கு இடமின்றி' கண்டனம் செய்தார்.

லெபனானில் உள்ள கனேடியர்களை உடனடியாக வெளியேறுமாறு ஜொலி மீண்டும் வலியுறுத்தினார்.

இஸ்ரேல் அந்த நாட்டின் தெற்குப் பகுதியில் ஹிஸ்புல்லாஹ் இலக்குகளுக்கு எதிராக வரையறுக்கப்பட்ட தரை நடவடிக்கை என்று அழைக்கப்படுவதைத் தொடங்கியது.

'ஈரானின் இந்த தாக்குதல்கள் பிராந்தியத்தை மேலும் சீர்குலைக்க மட்டுமே உதவும். மேலும் அது நிறுத்தப்பட வேண்டும்' என்று நாடாளுமன்றத்தில் வைத்து அமைச்சர் ஜோலி கூறினார்.

இஸ்ரேல் மற்றும் ஈரானின் சமீபத்திய நகர்வுகள் மத்திய கிழக்கில் 'முழுமையான போருக்கான' ஆபத்தை ஏற்படுத்தியுள்ளன என அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கு தன்னைத் தற்காத்துக் கொள்ள உரிமை உண்டு என்று ஐயத்திற்கு இடமின்றி கூறுமாறு அரசாங்கத்திடம் கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொய்லியேவ் கோரியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜோலி, முந்தைய நாள் தனது இஸ்ரேலிய சகாக்களுடன் தொடர்பில் இருந்தார் எனக் கூறினார்.

பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேயர் மற்றும் ஜோலி இருவரும் தூதரக தீர்வு சாத்தியம் என்று தாங்கள் இன்னும் நம்புகின்றார்கள் என வலியுறுத்தினர்.



## மிஸிஸாகாவில்...

காயம் அடைந்த இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேலதிக விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

சென்ட்ரல் பார்க்வே மற்றும் ஜோன் டிரைவ் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பீல் பிராந்திய பொலிஸார் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த இடத்தில் துப்பாக்கிச் சூடு அல்லது கத்திக்குத்து தாக்குதல் இடம்பெற்று இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் எவ்வாறான தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது என்பது குறித்த தகவல்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை.

தாக்குதலில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களுக்கு உயிர் ஆபத்து கிடையாது என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த தாக்குதலுடன் தொடர்புடைய நபர்கள் பற்றிய விவரங்கள் எதையும் பொலிஸார் இதுவரையில் வெளியிடவில்லை.




# ஒன்ராரியோவில் உண்மை, நல்லிணக்க தினத்தை சம்பளத்துடனான விடுமுறை தினமாக அறிவியுங்கள்!

## மாகாணத்தின் ஒரே ஒரு பழங்குடியினப் பிரதிநிதி கோரிக்கை

ஒன்ராரியோ, ஒக்டோபர் 02

கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தில் உண்மை மற்றும் நல்லிணக்க தேசிய தினத்தை சம்பளம் வழங்கும் விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தின் ஒரே ஒரு பழங்குடியின பிரதிநிதி இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பிரேரணை ஒன்றை சட்டசபையில் முன்வைக்கத் தாம் திட்டமிட்டுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய ரீதியில் விடுமுறையாக அறிவிக்கப்பட்டாலும் மாகாணத்தில் சம்பளம் வழங்கும் விடுமுறை தினமாக உண்மை மற்றும் நல்லிணக்க தேசிய தினம் அறிவிக்கப்படவில்லை. எனவே எதிர்வரும் காலங்களில் உண்மை மற்றும் நல்லிணக்க தேசிய தினத்தை சம்பளத்துடனான விடுமுறையாக அறிவிக்க வேண்டும் என புதிய ஜனநாயக கட்சியின் பிரதி தலைவர் சோல் மாமாகாவா கோரிக்கையை விடுத்துள்ளார்.



# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழப்பு; ஒருவர் காயம்!

## நோர்த் யோர்க் மற்றும் ஈஸ்ட் யோர்க்கில் சம்பவங்கள்

ஒன்றாரியோ, ஒக்டோபர் 02

நோர்த் யோர்க் மற்றும் ஈஸ்ட் யோர்க்கில் ஒரே இரவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார், மற்றொருவர் உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் மருத்துவமனையில் உள்ளார்.

லோரன்ஸ் அவென்யூ வெஸ்ட் மற்றும் நோர்த் யார்க்கில் உள்ள மார்லி அவென்யூ பகுதியில் லோரன்ஸ் ஆலன் சென்டரின் வாகன நிறுத்துமிடத்தில் திங்கள்கிழமை நள்ளிரவுக்கு முன்பு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

20 வயதுடைய நபர் ஒருவர் சுடப்பட்ட நிலையில் காணப்பட்டார் எனவும், பின்னர் அவர் மருத்துவமனையில் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கொலைப் பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# குறைந்தபட்ச ஊதியத் தொகை நான்கு மாகாணங்களில் உயர்வு

ஒன்றாரியோ, ஒக்டோபர் 02 - நான்கு மாகாணங்களில் குறைந்த பட்ச ஊதியம் அதிகரித்துள்ளது.

ஒக்டோபர் முதலாம் தேதி முதல் ஒன்றாரியோ, மனிடோபா, சஸ்காட்சுவான், பிரின்ஸ் எட்வர்ட் தீவு ஆகிய மாகாணங்களில் குறைந்தபட்ச ஊதியம் அதிகரித்துள்ளது.

ஒன்ராரியோவில் ஒரு மணி நேரத்திற்கு ஊதியம் 65 சதத்தினால் அதிகரித்து 17.20 டொலராக உள்ளது.

சஸ்காட்சுவானின் குறைந்தபட்ச ஊதியம் ஒரு டொலரால் அதிகரித்து 15 டொலராக உள்ளது.

மனிடோபாவில், ஊதியம் 50 சதத்தினால் அதிகரித்து 15.80 டொலராக உள்ளது.

பிரின்ஸ் எட்வர்ட் தீவில் 60 சதத்தினால் அதிகரித்து வரும் குறைந்தபட்ச ஊதியம் 16 டொலராக உள்ளது.



# பிரிட்டிஷ் கொலம்பியத் தீவில் ராணுவப் பயிற்சி நடவடிக்கை

விக்டோரியாவிற்கு தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள சிறு தீவு ஒன்றில் எதிர்வரும் 4 ஆம் திகதி வரையில் இராணுவப் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன எனவும் இந்தப் பயிற்சி நடவடிக்கைகளின் போது வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட உள்ளன எனவும் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாண இராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கனடிய தேசிய பாதுகாப்பு திணைக்களம் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

நாள் தோறும் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் இந்தப் பயிற்சி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இந்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# தங்களைத் தண்டிக்க வேண்டாம் எனக் கோரும் கனடா புகையிலை உற்பத்தி நிறுவனங்கள்!

கனடாவில் இயங்கி வரும் பிரதான புகையிலை உற்பத்தி நிறுவனங்கள் தங்களுக்கு எதிராகத் தண்டனை விதிக்க வேண்டாம் என நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளன.

ஏற்கனவே நீதிமன்றம் பிரதான மூன்று புகையிலை உற்பத்தி நிறுவனங்களுக்கு பெரும் தொகை - பல பில்லியன் டொலர்கள் - அபராதங்களை விதித்துள்ளது.

புகைப்பிடிப்பவர்கள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த சட்ட நடவடிக்கையை இடை நிறுத்துமாறு புகையிலை உற்பத்தி நிறுவனங்கள் கோரியுள்ளன.

ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவை மேலும் நீடிக்குமாறு அந்தப் புகையிலை உற்பத்தி நிறுவனங்கள் கோரியுள்ளன.

ஒன்றாரியோ நீதிமன்றில் குறித்த நிறுவனங்கள் இது தொடர்பிலான மனுவை தாக்கல் செய்துள்ளன.

உலகின் முன்னணி புகையிலை உற்பத்தி நிறுவனங்களான ரோத் மான்ஸ் பென்சன் அண்ட் ஹெட்ஜஸ், இம்பீரியல் மற்றும் மெக்டொனால்ட் கோர் ஆகிய நிறுவனங்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

தங்களுக்கு எதிரான தீர்ப்பினை எதிர்வரும் மார்ச் மாதம் 25ஆம் திகதி வரையில் நீடிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கையை பரிசீலனை செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்படுவதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# குழந்தை பிறப்பு வீதம் கனடாவில் குறைகிறது

கனடாவில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக நாட்டில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் அதிக அளவு குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்த மாகாணமாக பிரிட்டிஷ் கொலம்பியா கருதப்படுகின்றது.

கடந்த 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் அங்கு குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

உலகில் குழந்தை பிறப்பு வீதம் குறைந்த நாடுகளின் வரிசையில் கனடா இணைந்து கொண்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.



தென்கொரியா, ஸ்பெயின், இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் இந்த வரிசையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார காரணிகளினால் இவ்வாறு குழந்தை பிறப்புத் தொடர்பில் இளம் தலைமுறையினர் கூடுதல் சவால்களை எதிர் நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவும் நாட்டில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# புகலிடக் கோரிக்கையாளர்களுக்கான ‘காத்திருப்பு வலயங்களை’ அமையுங்கள்

## பிரான்ஸைப் பின்பற்றுமாறு கோருகின்றார் கியூபெக் முதல்வர் பிரான்சுவா லெகோல்ட்




கியூபெக், ஒக்டோபர் 02

பிரான்ஸில் நடைமுறையில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்களுக்காக ‘காத்திருப்பு வலயங்களை’ அமைக்குமாறு மத்திய அரசாங்கத்திடம், கியூபெக் முதல்வர் பிரான்சுவா லெகோல்ட் கோரியுள்ளார்.

நேற்று பாரிஸில் நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது லெகால்ட் செய்தியாளர்களிடம், கனடா ஐரோப்பிய நாட்டிலிருந்து உத்வேகம் பெற வேண்டும் என்று கூறினார்.

கனடாவில் காத்திருப்பு வலயங்கள், விமான நிலையங்களுக்கு அருகாமையில் அல்லது பிரதேசத்தில் வேறு இடங்களில் அமைக்கப்படலாம் என்றும் அவர் கூறினார்.

கனடா முழுவதும் இருக்கும் அகதிகளை மறுவிநியோகம் செய்யுமாறு பல மாதங்களாக மத்திய அரசுக்கு பிரதமர் அழைப்பு விடுத்து வருகிறார்.

பிரான்ஸில், படகு, ரயில் அல்லது விமானம் மூலம் வருபவர்கள் தஞ்சம் கோரினால், அவர்கள் நுழைய மறுக்கப்பட்டாலோ அல்லது அவர்களின் நாட்டிற்கு ஏற மறுக்கப்பட்டாலோ 26 நாள்கள் வரை எல்லையில் காத்திருப்புப் பகுதியில் வைக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



# அடுத்த நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் வெற்றிகரமாகத் தாண்டியது ட்ரூடோவின் அரசு

ஒன்றாரியோ, ஒக்டோபர் 02

கன்சர்வேடிவ் கட்சியின் மற்றொரு நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கம் வெற்றி பெற்றது.

ஒரு வாரத்தில் இரண்டாவது தடவையாக லிபரல் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கன்சர்வேடிவ் கட்சி தோல்வியடைந்தது.

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவின் அரசாங்கத்திற்கு எதிராக மற்றொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை கன்சர்வேட்டிவ் கட்சி கடந்த வியாழக்கிழமை சபையில் முன்வைத்தது.

இந்த புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஏற்கனவே புதன்கிழமை வாக்களிப்புக்கு விடப்பட்ட முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்த நிலையில், இந்த புதிய நம்பிக்கையில்லாப் பிரேரணையை கன்சர்வேட்டிவ் கட்சி சமர்ப்பித்தது.

கன்சர்வேடிவ் கட்சியின் இந்த புதிய நம்பிக்கையில்லாப் பிரேரணை 207-121 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

